**OS.94/2022**

**நாள். 29.01.2026.**

**வா.சா.1 – மணிகண்டன், த/பெ.வேலுசேர்வை**

2, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–

இராமநாதபுரம்நகர் புளிக்காரத் தெருவில் எங்கள் குடும்பத்திற்கு எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒருவீடு மட்டும்தான் உள்ளது. அந்த வீடு யார் பெயரில் உள்ளது என்றால் என் அப்பா பெயரில் இருந்து வருகிறது. அந்த வீட்டின் பழைய கதவு எண்.4 சி, புதிய கதவு எண்.6 என்றால் சரிதான். சத்யா, சித்ரா (1, 3 வாதிகள்) என் சகோதரிகள் என்றால் சரிதான். 3ம் வாதி சித்ரா பட்டினம்காத்தான் பாரதிநகரில் குடியிருந்து வருகிறார். 1ம் பிரதிவாதியான என் தாயார் சரஸ்வதி இறப்பதற்கு முன்பு எத்தனை வருடங்களாக என்னுடன் குடியிருந்து வந்தார் என்றால் என் தகப்பனார் இறந்த பிறகு இறக்கும் வரை என்னுடன் தான் இருந்து வந்தார். என் தகப்பனார் 30.08.2002ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடன் வசித்து வந்த என் தாயாரை ஏன் பிரதிவாதியாக காண்பித்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் என் அம்மா எனக்கு தெரியாமல் கிரையம் செய்வதற்கு கையெழுத்து போட்டுவிட்டதால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்தேன். வழக்கு தாக்கல் செய்யும்போது என் அம்மாவின் விலாசத்தை நான் குடியிருக்கும் இராமநாதபுரம் புளிக்காரத் தெருவில் உள்ள கதவு எண்.6– ஐத்தான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து என் அம்மாவிற்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை 3ம் வாதியான சித்ராதான் கையெழுத்து போட்டு வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் அம்மா மகள்கள் வீட்டிற்கு செல்வார், அவ்வாறு சென்றபோது அழைப்பாணை வந்ததால் என் தங்கை சித்ரா வாங்கியிருப்பார். என் அம்மாவிற்கு கையெழுத்து தானாக போடத்தெரியாது. எவ்வாறு போடவேண்டும் என அவரது கையெழுத்தை போட்டு காண்பித்தால் அதைப்பார்த்து கையெழுத்து போடுவார். 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் நகல் **நீ.சா.ஆ.1**. அழைப்பாணையில் நான் குடியிருக்கும் புளிக்காரத் தெரு கதவு எண்.6 தான்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மா, என் தங்கையின் வீட்டிற்கு சென்றபோது என் அம்மாவிற்காக என் தங்கை கையெழுத்து போட்டு அழைபபாணை பெற்றதாக சொல்வது உண்மையல்ல என்றும், நான், என் அம்மா, தங்கை அனைவரும் ஒரே குடும்பமாக வசித்து வருகிறோம் என்றும், நாங்கள் அனைவரும் கூட்டு சேர்ந்து 2, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என் தாயார் தாவா 3ம் இலக்க சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் சார்வு செய்யப்பட்ட பிராது நகலில் உள்ள கையெழுத்து என் அம்மாவின் கையெழுத்துதான். 2ம் பிரதிவாதிக்கு பிராது நகலுடன் அனுப்பப்பட்ட அழைப்பாணை **பி.வா.சா.ஆ.1**. பி.வா.சாஆ.1 மூலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கிலும் அவரது விலாசத்தை புளிக்காரத் தெரு கதவு எண்.6 ஐ தான் காட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தாயார் தாவா 3ம் இலக்க சொத்து அவருக்கு27.09.1985 மற்றும் 26.11.1986 தேதியிட்ட கிரைய பத்திரங்களின் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்தினை பொறுத்து 2ம் பிரதிவாதி என் தாயாரை ஏமாற்றி 18.08.2004ம் தேதியில் ஒரு பதிவு செய்யப்பட்ட இனாம் ஆவணம் எழுதி வாங்கியுள்ளது செல்லாது என்றும், அது ரத்து செய்யப்படவேண்டும் என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் எனக்கு தெரியாது. தாவா வழக்கில் நான் புளிக்காரத் தெரு கதவு எண்.6 வீட்டை சொத்தாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். 1ம் இலக்க சொத்து எங்கு உள்ளது என்றால் இராமநாதபுரம் – மதுரை செல்லும் சாலையில் Ibaco ஐஸ்கிரீம் கம்பெனிக்கு அருகில் கிழக்குப்பக்கம் உள்ளது. அந்த சொத்தின் சர்வே எண்ணை வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சொத்திற்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் அப்பா பெயரில் இருந்து வருகிறது. அதில் உள்ள கட்டிடத்திற்கும் என் அப்பா

பெயரில் வரிவிதிப்பு ஏற்பட்டுள்ளது. 2ம் இலக்க சொத்து எங்கு உள்ளது என்றால் இராமநாதபுரம் – மதுரை செல்லும் சாலையில் Ibaco ஐஸ்கிரீம் கம்பெனிக்கு அருகில் கிழக்குப்பக்கம் உள்ள 1ம் இலக்க சொத்திற்கு முன்புறம் தெற்கே உள்ளது. 2ம் இலக்க சொத்து காலியிடமாகத்தான் உள்ளது. அந்த சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் அப்பா பெயரில் உள்ளது. 1, 2 இலக்க சொத்துக்களுக்குண்டான பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1, 2 இலக்க சொத்துக்களில் 2ம் பிரதிவாதிக்கு பாகம் பிரித்து கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல செய்துள்ள தாவா வழக்கு பிராதில் 1, 2 இலக்க சொத்துக்களில் 2ம் பிரதிவாதிக்கு 1/6 பாகம் உள்ளது என ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா 3ம் இலக்க சொத்து சம்மந்தமான விவரங்களை நானும், என் சகோதரிகளும் கூறித்தான் பிராதில் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரிதான். தாவா பிராதில் பாரா 3ல் என் தகப்பனாரான வேலு அவரது பொதுகுடும்ப வருமானத்தை வைத்து தாவா 3ம் இலக்க சொத்தினை என் தாயாரான 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கும், தாயாருக்கும் 1973ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். 1ம் வாதி சத்யா 1975ம் ஆண்டு பிறந்தார் என்றால் சரிதான். நான் 1977ம் ஆண்டு பிறந்தேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கவிதா 1979ம் ஆண்டும்,. 3ம்பிரதிவாதி மாரிஸ்வரன் 1980ம் வருடமும், 3ம் வாதி சித்ரா 1982ம் ஆண்டும் பிறந்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா 3ம் இலக்க சொத்து கிரையம் பெறும்போது 1ம் வாதிக்கே 10 வயது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில் என் தகப்பனாருக்கு பொதுகுடும்ப வருமானம் இல்லை என்றும், அந்த பொதுகுடும்ப வருமானத்தை கொண்டு என் தகப்பனார் 3ம் இலக்க சொத்தை கிரையம் பெறவில்லை என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அவ்வாறு எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகுதான் வழக்கு விசாரணைக்கு பட்டியலிட்ட பிறகு தாவா 3ம் இலக்க சொத்தை என் தகப்பனார்

அவரது சொந்த வருமானத்திலிருந்து என் தாயார் பெயரில் கிரையம் பெற்றுள்ளார் என பிராதை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட பிராதில் பாரா 3ல் தாவா 3ம் இலக்க சொத்து பொதுகுடும்ப வருமானத்தை வைத்து வாங்கப்பட்டது என்றும், பாரா 4ல் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டதாக முன்னுக்குப்பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள வா.சா.ஆ1க்குரிய அசல் ஆவணம் எங்கு உள்ளது என்றால் என்னிடம்தான் உள்ளது. வா.சா.ஆ.2, 3 க்குரிய அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் தற்போது கிரையம் வாங்கியுள்ள 5ம் பிரதிவாதி வசம் உள்ளது. கிரையத்திற்கு முன்பு என்னிடம்தான் இருந்தது. தாவா 3ம் இலக்க சொத்து என் தாயார் பெயரில் கிரைய ஆவணம் ஏற்பட்டபோது காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். என் தாயார் பெயரில் கிரையம் பெற்ற இரண்டு கிரைய ஆவணங்களை( வா.சா.ஆ.2, 3) நான் படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்துப் பார்த்துள்ளேன். வா.சா.ஆ 2, 3 க்குரிய அசல் ஆவணங்களை யார் என் வீட்டிலிருந்து தூக்கி சென்றது என்றால் என் தங்கையாக 2ம் பிரதிவாதி கவிதா. எந்த வருடம் எடுத்து சென்றார் என்றால் என் தந்தை இறந்த இரண்டு வருடம் கழித்து, 2004ம் ஆண்டா என்றால் சரிதான். அவ்வாறு எடுத்து சென்றது சம்மந்தமாக 2ம் பிரதிவாதி கவிதா மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சகோதரி என்பதால் காவல் நிலையத்தில் அசிங்கப்படக்கூடாது என்பதற்காக கொடுக்கவில்லை. 2004ம் ஆண்டே 2ம் பிரதிவாதி கவிதா வா.சா.ஆ 2, 3க்குரிய அசல் ஆவணங்களை எடுத்து சென்றுவிட்டார் என பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3 கிரைய ஆவணங்களில் தாவா 3ம் இலக்க சொத்து என் தகப்பனாரின் வருமானத்தில் வாங்கப்பட்டதாக சரத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3 கிரைய ஆவணங்கள் மூலம் என் தாயார் கிரையம் பெற்ற பிறகு தாவா 3ம் இலக்க சொத்தில் வீடு கட்டினார் என்றால், என் தகப்பனார்தான் கட்டினார். தாவா 3ம் இலக்க சொத்தில் மொத்தம்

எத்தனை வீடு இருந்தது என்றால் 4 வீடுகள். அந்த 4 வீடுகளுக்கும் என் தாயார் பெயரில்தான் கட்டிட வரைபடம் மற்றும் அனுமதி பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த 4 வீட்டிற்கும் என் தாயார் பெயரில்தான் மின்இணைப்பும், வீட்டு வரிவிதிப்பும் ஏற்பட்டது என்றால் சரிதான். என் தாயார் 2ம் பிரதிவாதி கவிதாவிற்கு 18.08.2004ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட இனாம் ஆவணத்தை வழக்கு 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எழுதிக்கொடுத்த சமயத்தில் தெரியாது. வா.சா.ஆ.4ல் என் அம்மாவின் விலாசம் நான் தற்போது வசித்து வரும் இராமநாதபுரம் புளிக்காரத்தெரு பழைய கதவு எண்.4 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 எழுதிக்கொடுத்த பிறகு என் தூண்டுதலின்பேரில் என் தாயார் 2022ம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமனறத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 18 வருடங்களாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வழக்குபோட நான் தூண்டவில்லை, என் தாயாராக போட்டார். 2ம்பிரதிவாதியான கவிதா வழக்கு 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து 4ம் பிரதிவாதி சிவசாமிக்கு 24.06.2011ம் தேதியில் ஒரு அடமான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அந்த ஆவணம் பற்றி 2021ம் ஆண்டுதான் தெரியும். அப்போதுதான் என் அம்மாவுக்கும் தெரியும். 2ம்பிரதிவாதியான கவிதா 13.10.2022ம் தேதி ரூ.17 இலட்சம் கிரைய தொகையாக 5ம் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்டு அன்றைய தினமே ஒரு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் 2022ம் வருடம் டிசம்பர் மாதம் கடைசியில் 5ம் பிரதிவாதி சொத்தை சுத்தம் செய்ய வந்தபோதுதான் 2ம் பிரதிவாதி கிரையம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 பத்திரப்பதிவு ஆவணம் 21.10.2022ம் தேதியிலேயே சார்பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்திலேயே ஏற்கனவே இருந்த கட்டுமானங்கள் அழிமானமானநிலையில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. தாவா 3ம் இலக்க சொத்தில் இருந்த வீடுகளுக்கு எப்போதாவது நான் வீட்டு வரியோ, மின் கட்டணமோ

செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன். அவ்வாறு செலுத்தியுள்ளேன் என்பதற்கு ஆதாரமாக வீட்டுவரி ரசீதுகளையும், மின்ரசீதுகளையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இராமநாதபுரம் பாரதிநகர் புளிக்காரத் தெருவில் சொத்து மதிப்பு தற்போது உயர்ந்துள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தின் தற்போதைய மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் ரூ.1 கோடி இருக்கும். 5ம் பிரதிவாதி கிரையம் பெறும்போது தாவா சொத்தில் ஏற்கனவே அழிமானம் ஆகியிருந்த கட்டினத்தினால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்களுக்கு தொந்தரவாக இருந்ததால் அதனை சரிசெய்வதற்கு 5ம் பிரதிவாதி முயற்சித்தபோது 3ம் வாதியின் கணவர் அதை தடுத்தார் என்று சொன்னால் நான்தான் தடுத்தேன், அவ்வாறு எந்தவித தொந்தரவும் இல்லை. தாவா 3ம் இலக்க சொத்தானது எனது தாயார் 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றும், 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்தினை பதிவு செய்யப்பட்ட இனாம் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்தார் என்றும், 2ம் பிரதிவாதியிடமிருந்து 5ம் பிரதிவாதி தாவா 3ம் இலக்க சொத்தை சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும், அதனால் தாவா சொத்துகளில் எந்தவித பாகமும் கிடைக்கக்கூடியதில்லை என்றால் சரியல்ல. தாவா 1, 2 இலக்க சொத்துக்கள் மற்றும் நான் குடியிருந்து வரும புளிக்காரத்தெரு கதவு எண்.6 வீடு தவிர்த்து இதர சொத்துக்களை தவிர்த்து வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் மற்ற சொத்துக்களை பொறுத்து ஒரு பதிவு செய்யப்பட்ட பாக ஆவணம் மூலம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தையும் என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். ஏற்கனவே என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகம் செய்து கொண்டோம் என்றும், தாவா 3ம் இலக்க சொத்து என் தாயாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால்தான் ஏற்கனவே எழுதிக்கொண்ட பாகஆவணத்தில் சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதியிடமிருந்து பணம்பறிக்க

வேண்டும் என்ற நோக்கத்தில்தான் பொய்யாக சங்கதிகளை கூறி நானும், என் சகோதரிகள் சத்யா, சித்ரா ஆகியோரும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதனால் எங்கள் வழக்கு அதிக செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

இவ்வழக்கில் 6 முதுல் 8 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ள சார்பதிவாளர், மாவட்ட பதிவாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர்கள் வழககிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றும் அதனால் அவர்களைப் பொறுத்து கோரியுள்ள 7 வது பரிகாரம் கோரமுடியாது என்றும், அதனால் அவர்களை பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.